## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2020–2021–ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் (CTDP) கீழ் – பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திட ரூ.5,76,28,000/– நிதி ஒப்பளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(பமே1(2))துறை

அரசாணை(ப) எண். 128

நாள் : 05.09.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, ஆவணி மாதம் 22 ஆம் நாள்

படிக்கப்பட்டது

பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். பமே/அ3/2618/2019–1, நாள் 28.08.2019 மற்றும் 10.07.2020

---

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், 2019–2020–ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் (CTDP) திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவாய் இனம் மற்றும் மூலதனச் செலவினங்களில் இருந்து கீழ்கண்டவாறு நலத்திட்டங்களை மேற்கொள்ள அரசிற்கு முன்மொழிவுகளை அனுப்பியுள்ளார்.

| வ. எண் | பொருள் | வருவாய் செலவினம் (ரூபாய்) | மூலதனச் செலவினம். (ரூபாய்) | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | திட்டம்–1<br>செவிலியர் பட்டயப் படிப்பு (DIPLOMA IN GENERAL NURSING AND MIDWIFERY COURSE (DGNM))- | 7000000 | 0 | 7000000 |
| 2. | திட்டம்–2<br>செங்கல் தயாரிக்கும் தொழில் அமைத்து தருதல். | 1476000 | 6700000 | 8176000 |
| 3. | திட்டம்– 3<br>தையல் தொழிற்கூடம் (**Tailoring Unit**) அமைத்து தருதல். | 720000 | 500000 | 1220000 |
| 4. | திட்டம்–4<br>வன உரிமைச் சட்டம் 2008–இல் வனத்திலுள்ள பழங்குடியினர் விவசாய நிலங்களை பூகோள தரவின் முறையில் நிலங்கள் அளவிட தொகை வழங்குதல் | 10000000 | 0 | 10000000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | திட்டம்–5<br>பழங்குடியின மக்களுக்கு துரித மின் இணைப்பு அமைத்து தருதல் | 7500000 | 0 | 7500000 |
| 6. | திட்டம்—6<br>பழங்குடியின மக்களுக்கு கறவை மாடுகள், போர்வெல் மற்றும் பவர்டில்லர் வழங்குதல் | 18115000 | 0 | 18115000 |
| 7. | திட்டம்–7<br>TNPSC, UPSC, SSC, Railway, Bank, TRB இலவச பயிற்சி மையங்கள் அமைத்தல் | 4900000 | 0 | 4900000 |
| 8. | திட்டம்–8<br>பாம்பு விஷம் எடுக்கும் தொழில் செய்ய நிதி உதவி அளித்தல். | 2526000 | 2215000 | 4741000 |
| 9. | திட்டம்–9<br>சிறுதானிய உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு பழங்குடியின விவசாயிகளின் பங்குகளை வழங்குதல் | 717000 | 0 | 717000 |
| | மொத்தம் | 52954000 | 9415000 | 62369000 |

மேலும், நிர்வாக காரணங்களின் அடிப்படையில் பழங்குடியினர் நல இயக்குநர் தனது 10.07.2020 நாளிட்ட கடிதத்தில், வரிசை எண். 8–இல் காணும் திட்டத்தைத் (ரூ.4741000) தவிர்த்து மற்ற திட்டங்கள் அனைத்தும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கியமானவை என்பதால் அதற்கான செலவினத் தொகை ரூ.5,76,28,000/–ற்கு இந்நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

2. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று பழங்குடியின மக்களுக்கான இணைப்பில் கண்டுள்ள நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான வருவாய் இனச் செலவினத்தில் ரூ. 5,04,28,000/–மும், மூலதனச் செலவினத்தில் ரூ.72,00,000/–மும் ஆக மொத்தம் ரூ.5,76,28,000/– (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்தி ஆறு இலட்சத்து இருபத்தி எட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | பொருள் | வருவாய் செலவினம் (ரூபாய்) | மூலதனச் செலவினம். (ரூபாய்) | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | திட்டம்–1<br>செவிலியர் பட்டயப் படிப்பு (DIPLOMA IN GENERAL NURSING AND MIDWIFERY COURSE (DGNM))- | 7000000 | 0 | 7000000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | **திட்டம்–2**<br>செங்கல் தயாரிக்கும் தொழில் அமைத்து தருதல். | 1476000 | 6700000 | 8176000 |
| 3. | **திட்டம்– 3**<br>தையல் தொழிற்கூடம் (**Tailoring Unit**) அமைத்து தருதல். | 720000 | 500000 | 1220000 |
| 4. | **திட்டம்–4**<br>வன உரிமைச் சட்டம் 2008–இல் வனத்திலுள்ள பழங்குடியினர் விவசாய நிலங்களை பூகோள தரவின் முறையில் நிலங்கள் அளவிட தொகை வழங்குதல் | 10000000 | 0 | 10000000 |
| 5. | **திட்டம்–5**<br>பழங்குடியின மக்களுக்கு துரித மின் இணைப்பு அமைத்து தருதல் | 7500000 | 0 | 7500000 |
| 6. | **திட்டம்–6**<br>பழங்குடியின மக்களுக்கு கறவை மாடுகள், போர்வெல் மற்றும் பவர்டில்லர் வழங்குதல் | 18115000 | 0 | 18115000 |
| 7. | **திட்டம்–7**<br>TNPSC, UPSC, SSC, Railway, Bank, TRB இலவச பயிற்சி மையங்கள் அமைத்தல் | 4900000 | 0 | 4900000 |
| 8. | **திட்டம்–8**<br>சிறுதானிய உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு பழங்குடியின விவசாயிகளின் பங்குகளை வழங்குதல் | 717000 | 0 | 717000 |
| | **மொத்தம்** | 50428000 | 7200000 | 57628000 |

(ரூபாய் ஐந்து கோடியே எழுபத்தி ஆறு இலட்சத்து இருபத்தி எட்டாயிரம் மட்டும்)

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**வருவாய் செலவினம் – ரூ. 5,04,28,000/–**

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02– பழங்குடியினர் நலன் – மாநில செலவினங்கள் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் JY – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் – 309 உதவித்தொகை – 01 நடப்பு செலவுக்கான உதவித்தொகை

(த.தொ.கு. 2225–02–796–JY–30901)

த.பி.பா

மூலதன செலவினம் – ரூ.72,00,000/-

4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச்செலவு 02 பழங்குடியினர் நலன் 796 விரிவான பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் மாநில செலவினங்கள் JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் 416 பெரும்பணிகள் –01

(த.தொ.கு. 4225 02 796 JA 41601)

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பழங்குடியினர் நல இயக்குநர் பெற்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேற்கண்ட திட்ட செயலாக்கத்தினை கண்காணிக்கவும், திட்டத்தை சுணக்கமின்றி நிறைவேற்றி பயனீட்டுச் சான்றிதழை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்று அரசுக்கு உரிய காலத்திற்குள் அனுப்பி வைக்கவும் பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா்பற்ற எண். 25675/நிதி(ஆதி(ம)பந)/2020, நாள் 05.05.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஓட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை –5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்,
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 18.
மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை – 9/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 8.

<u>நகல்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (ஆதி(ம)பந)/வரவு செலவு) துறை, சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/கமபா/அநமு–1)துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

**திட்டம்–1 செவிலியர் பட்டயப் படிப்பு**
**(DIPLOMA IN GENERAL NURSING AND MIDWIFERY COURSE)**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள்/ மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பில் 40 சதவீதம் / அதற்குமேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவியர்களின் மேல் படிப்பிற்காக இந்திய நர்சிங் கவுன்சில் மற்றும் தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செவிலியர் பயிற்சி மையங்களில் செவிலியர் பட்டயப் படிப்பில் **(DIPLOMA IN GENERAL NURSING AND MIDWIFERY COURSE (DGNM))** சேர்ந்து அவர்கள் தொடர்ந்து 3 ஆண்டுகள் பயில ஆகும் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், விடுதிக் கட்டணம், சீருடைக் கட்டணம் மற்றும் இதர கட்டண செலவினங்கள் முழுவதையும் அரசே ஏற்பதற்கு ஏதுவாக, ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து மதிப்பெண்கள் அடிப்படையில் தலா 25 மாணவியர்கள் தேர்வு செய்து, தேர்வு செய்யப்பட்ட மாணவியர்கள் பட்டியலை பழங்குடியின நல இயக்குநரத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாணவியர்கள் பட்டியலை ஒருங்கிணைத்து (Consolidate) அதிலிருந்து அதிகம் மதிப்பெண்கள் பெற்ற முதல் 100 மாணவியர்களை தேர்வு செய்யப்படுவார்கள். மேலும் தேர்வு செய்யப்பட்ட 100 மாணவியர்கள் இந்திய செவிலியர் கவுன்சில் மற்றும் தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செவிலியர் பயிற்சி மையங்களில் செவிலியர் பட்டயப் படிப்பில் **(DIPLOMA IN GENERAL NURSING AND MIDWIFERY COURSE (DGNM))** சேர்த்து பயில வைப்பதற்கு வருவாய் இன செலவினத்தில் ஆகும் உத்தேச செலவின மதிப்பீடு பின்வருமாறு:-

| வ.எண் | செலவின விவரம் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | ஓர் ஆண்டிற்கான கல்விக் கட்டணம் | 40000 |
| 2. | வகுப்பறை சீருடை கட்டணம் (2 செட்)–UNIFORM | 2000 |

| | | |
|---|---|---|
| 3. | COMMUNITY UNIFORM(2 SAREES) | 1500 |
| 4. | பயிற்சி சீருடை கட்டணம் (2 செட்) CLINICAL UNIFORM | 3500 |
| 5. | புத்தக கட்டணம் | 4000 |
| 6. | விடுதிக் கட்டணம் | 11000 |
| 7. | தேர்வு கட்டணம் மற்றும் செய்முறை பயிற்சி கட்டணம் | 5000 |
| 8. | செய்முறை தூக்கி (COMMUNITY Bag) | 3000 |
| **ஒரு மாணவியருக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் செலவு மொத்த தொகை** | | **70000** |
| **100 மாணவியருக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் செலவு மொத்த தொகை** | | **7000000** |

**திட்டம்–2**

**செங்கல் தயாரிக்கும் தொழில் அமைத்து தருதல்**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம் மீசநல்லூர் கிராமத்தில் அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் இருளர் இனம் சேர்ந்த கொத்தடிமையில் இருந்து மீட்கப்பட்ட 143 குடும்பங்களுக்கு இலவச வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இம்மக்களுக்காக சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் வீடுகள், சமுதாயக் கூடம், பூங்கா, சாலை வசதி, தெருவிளக்கு, குடிநீர் கழிப்பிட வசதி, சோலார் மின் இணைப்பு, இன்வர்ட்டர், மேல்நிலை குடிநீர் தொட்டி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொழிற் கூட்டுறவு சங்கம் அமைத்து சொந்தமாக செங்கல் தயாரிக்கும் தொழில் அமைத்து தரலாம். இதனை திருவண்ணாமலை மாவட்ட தொழில் மையம் மூலம் Thiruvannamalai District Irula Bricks Manufacturer's Livelihood Industrial Society Limited என்ற பெயரில் தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இக்கூட்டுறவு சங்கம் மூலம் செங்கல் தயாரிக்கும் தொழில் துவங்க மூலதன செலவினம் ரூ.67.00 இலட்சமும், வருவாய் செலவினம் ரூ.14.76 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.81.76 இலட்சம் வழங்கப்படுகிறது.

**திட்டம் – 3**

**தையல் தொழிற்கூடம் (Tailoring Unit) அமைத்து தருதல்.**

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் மக்களுக்கு தையல் தொழில் மூலம் குறிப்பாக பெண்களுக்கு நிலையான வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தையல் அலகு **(Tailoring Unit)** அமைத்தால் பெரிய ஜவுளி கடைகள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள் பெரிய அளவில் துணிகள் தைத்து வழங்கும் வாய்ப்பை பெறும். பொது மக்கள் மூலமாகவும், பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணாக்கர்களின் சீருடைகள் தைக்கும் வாய்ப்பை பெற்று இதன் மூலம் நிலையான வருமானம் பெறலாம். மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மகளிர்களை சுயதொழிலில் ஈடுபடுத்திடவும், தனித்திறமைகளை மற்றும் அவர்கள் வாழ்வில் தன்னம்பிக்கை பெறும் வகையில் தையற் பயிற்சி கூடம் அமைத்திட வருவாய் இனத்தில் இருந்து **ரூ.7,20,000** மற்றும் மூலதனச் செலவினத்திலிருந்து **ரூ.5,00,000** ஆக மொத்தம் **ரூ.12,20,000/–** க்கு (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) பழங்குடியின மகளிர்களுக்கான நலத் திட்ட மதிப்பீடு பின்வருமாறு:-

**திட்ட மதிப்பீடு**

| வ. எண் | | திட்ட செலவினம் விவரம் | ஒரு மாதத்திற்கு (ரூபாய்) | ஓர் ஆண்டிற்கு (ரூபாய்) | வருவாய் செலவினம் (ரூபாய்) | மூலதனச் செலவினம் (ரூபாய்) | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தொடரும் செலவினம் | தையற்கூடம் அமைக்க கட்டிட வாடகை | 25000 | 300000 | 300000 | – | 300000 |
| 2. | | மின் கட்டணம் | 10000 | 120000 | 120000 | – | 120000 |
| 3. | தொடரா செலவினம் | 20 பெண்களுக்கு தனியார் பயிற்சி நிறுவனம் மூலம் 3 மாத கால தையல் பயிற்சி வழங்க பயிற்சி கட்டணம் | – | – | 200000 | – | 200000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | | 20 தையல் இயந்திரங்கள் விலை | – | – | – | 500000 | 500000 |
| 5. | | இதர செலவினங்கள் | – | – | 100000 | – | 100000 |
| | | மொத்தம் | | | 720000 | 500000 | 1220000 |

**திட்டம்– 4**

**பூகோள தரவு அளவிடப்பட்டு சர்வே தொகை வழங்குதல்**
**(வன உரிமைச் சட்டம் –2006)**

வன கிராமங்களில் வாழும் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்பவர்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் வன உரிமைகளை அங்கீகரிக்கும் வகையில் வன உரிமைச்சட்டம் 2006 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி 13.12.2005 ஆம் தேதிக்கு முன்பு வனங்களில் 75 ஆண்டுகளாக குடியிருந்து வரும் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியினருக்கும் அல்லது மூன்று தலை முறைகளாக வனங்களில் குடியிருக்கும் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியினருக்கும் வன உரிமைகள் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. வன உரிமைக்குழுக்கள், VLC, SDLC மற்றும் DLC அளவில் அங்கீகரிக்கப்பட்ட தனி உரிமை கோரிக்கைகளின் வன நிலங்களை பூகோள தரவின் அடிப்படையில் (Geo Survey) நில அளவை செய்யப்பட்டு பழங்குடியின பயனாளிகளுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு வருகிறது. பழங்குடியினர் அங்கு விவசாயம் செய்து வருகின்றனர். பிறமரபினர் 75 ஆண்டுகள் அல்லது மூன்று தலைமுறையாக விவசாயம் செய்து வருகின்றனர் என்பதை வன நிலங்களை பூகோள தரவின் அடிப்படையில் நில அளவை செய்யப்பட்டால் மட்டுமே தெளிவாக அறியமுடியும். எனவே, வன உரிமை பாதுகாப்புச் சட்டம் 2006–ன்படி வனத்தில் வாழும் 11000 ஏக்கர் பழங்குடியினர் விவசாய நிலங்கள் மேல் அளவிடப்பட்டு சர்வே (Geo Survey) செய்யப்பட்டதற்கு ரூ.2 கோடி வரை நிலுவையில் உள்ளது. எனவே, 2020–2021 ஆம் நிதியாண்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வருவாய் இனத்தில் இருந்து ரூ.1 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

**திட்டம்– 5**

**பழங்குடியின மக்களுக்கு துரித மின் இணைப்பு**

2016–2017 ஆம் ஆண்டு துரித மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/–வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.75 இலட்சம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்பீடு தொகையாக வழங்கப்பட்டது தற்போது இத்திட்டத்திற்காக 1044 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றும் நபர் ஒன்றிற்கு ரூ.75,000/– வீதம் மொத்தம் ரூ.783.00 இலட்சம் தேவைப்படும். எனவே மேற்காணும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வில் விவசாயத்தின் வாயிலாக மலர்ச்சியையும், முன்னேற்றத்தினையும் உருவாக்கும் பொருட்டு அந்த விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெற வேண்டி தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில் விண்ணப்பிக்கப்பட்ட 1044 நபர்களின் விண்ணப்பங்களில் 2020–2021 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு ரூ.75000/–வீதம் முதல் 100 பழங்குடியின விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு மொத்தம் ரூ75,00,000/–யினை (ரூபாய் எழுபத்திஐந்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதி செலவினத்தில் தாட்கோவிற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்– 6**

**பழங்குடியின மக்களுக்கு கறவை மாடுகள், போர்வெல் மற்றும் பவர்டில்லர் வழங்குதல்**

பழங்குடியின விவசாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு நிலையான வருவாயினை ஈட்டித்தரக்கூடிய கறவை மாடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் தருமபுரி, வேலூர், திருச்சி, திருவண்ணாமலை, அரியலூர் மற்றும் நீலகிரி ஆகிய 6 மாவட்டங்களுக்கு 289 கறவை மாடுகள் வழங்க கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:-

திட்ட மதிப்பீடு

1. கறவை மாடு

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வருவாய் இனம் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | கறவை மாடுகள் எண்ணிக்கை | ஒரு கறவை மாடு விலை ரூ. | |
| 1. | தருமபுரி | 50 | 35,000/- | 17,50,000 |
| 2. | திருச்சி | 50 | | 17,50,000 |
| 3. | வேலூர் | 50 | | 17,50,000 |
| 4. | திருவண்ணாமலை | 50 | | 17,50,000 |
| 5. | அரியலூர் | 50 | | 17,50,000 |
| 6. | நீலகிரி | 39 | | 13,65,000 |
| மொத்தம் | | 289 | | 1,01,15,000 |

2.போர்வெல்

விழுப்புரம், வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள பழங்குடியின மக்கள் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு பயன்பெறும் வகையில் ஒரு போர்வெல் ரூ.2,00,000/- வீதம் 3 மாவட்டங்களுக்கு 20 போர்வெல்கள் அமைக்க ரூ.40,00,000/-க்கான நிதி கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வருவாய் இனம் | | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| | | போர்வெல் எண்ணிக்கை | ஒரு போர்வெல் திட்டம் செயல்படுத்த ஆகும் செலவினம் ரூ. | |
| 1. | விழுப்புரம் | 10 | 2,00,000 | 20,00,000 |
| 2. | வேலூர் | 5 | | 10,00,000 |
| 3. | சேலம் | 5 | | 10,00,000 |
| மொத்தம் | | 20 | | 40,00,000 |

3.பவர்டில்லர்

பழங்குடியின பகுதிகளில் வேளாண் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில் மற்றும் வேளாண்மை பணிகளை பழங்குடியின விவசாயிகள் எளிதாக மேற்கொள்ள 100 சதவிகித மானியத்தில் கீழ்கண்ட 5 மாவட்டங்களுக்கு பவர்டில்லர்கள் ரூ.40,00,000/- மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வருவாய் இனம் | | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| | | பவர்டில்லர் எண்ணிக்கை | ஒரு பவர்டில்லர் திட்டம் செயல்படுத்த ஆகும் செலவினம் ரூ. | |
| 1. | விழுப்புரம் | 5 | 1,60,000 | 8,00,000 |
| 2. | வேலூர் | 5 | | 8,00,000 |
| 3. | சேலம் | 5 | | 8,00,000 |
| 4. | திருவண்ணாமலை | 5 | | 8,00,000 |
| 5. | தருமபுரி | 5 | | 8,00,000 |
| மொத்தம் | | 25 | | 40,00,000 |

மேற்காணும் 2020–2021–ஆம் நிதியாண்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தருமபுரி, திருச்சி, திருவண்ணாமலை, வேலூர், அரியலூர் மற்றும் நீலகிரி ஆகிய 6 மாவட்டங்களுக்கு மொத்தம் 289 கறவை மாடுகள் ரூ.1,01,15,000/– (ஒரு கறவை மாடு ரூ.35,000/–), விழுப்புரம் மாவட்டத்திற்கு 10 போர்வெல், வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்களுக்கு தலா 5 போர்வெல் வீதம் மொத்தம் 20 போர்வெல்களுக்கு ரூ.40,00,000/– (ஒரு போர் வெல் ரூ.2,00,000/–) மற்றும் விழுப்புரம், வேலூர், சேலம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களுக்கு தலா 5 பவர்டில்லர் வீதம் 25 பவர்டில்லர் மொத்த தொகை ரூ.40,00,000/– ஆக மொத்த கூடுதல் தொகை ரூ.1,81,15,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தொன்று இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) பழங்குடியின மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிட நிதி வழங்கலாம்.

**திட்டம்–7**
**TNPSC, UPSC, SSC, Railway, Bank, TRB இலவச பயிற்சி மையங்கள் அமைத்தல்**

அரசாணை(நிலை) எண். 9, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 06.02.2019–இல் பழங்குடியின மாணாக்கர்கள் மற்றும் பட்டதாரிகள், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலையில் சேர்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, TNPSC, UPSC, SSC, Railway, Bank, TRB ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை

தயார்படுத்திட ஏதுவாக கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, நீலகிரி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய 10 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் ஒரு இலவச பயிற்சி மையம் வீதம் 10 இலவச பயிற்சி மையங்கள் ரூ.35,00,000/– (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) செலவில் துவங்க கீழ்க்கண்டவாறு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 2018–2019இன் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

| வ. எண். | விவரம் | செலவினத் தொகை |
|---|---|---|
| 1 | பயிற்சி கையேடுகள் மற்றும் புத்தகங்கள் 50 மாணவர்களுக்கு xரூ.1000=50,000 | ரூ. 50,000/– |
| 2 | பயிற்சி அளித்தவர்களுக்கான மதிப்பூதியம் (50 நாட்கள் xரூ.750 x 2 = ரூ. 75,000/–) | ரூ. 75,000/– |
| 3 | துப்புறவுப் பணியாளர்களுக்கான சம்பளம் (1 பணியாளர்களுக்கு) | ரூ. 5,000/– |
| 4 | உணவுக் கட்டணம் (50 வேலை நாட்களுக்கு x 70 x 60 மாணவர்கள்) | ரூ. 2,10,000/– |
| 5 | இதர செலவினம் ஒரு மையத்திற்கு | ரூ.10,000/– |
| | ஆக மொத்தம் | ரூ.3,50,000/– |
| 6 | பயிற்சி மையத்திற்கு ஆகும் மொத்த செலவினம் 10 x 3,50,000 = | ரூ.35,00,000 /– |

(ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்)

2020–2021 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பட்டியலில் உள்ளவாறு 14 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் ஒரு இலவச பயிற்சி மையம் வீதம் 14 இலவச பயிற்சி மையங்கள் ரூ.49,00,000/– (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சம் மட்டும்) செலவில் துவங்க இலவச பயிற்சி மையங்கள் தொடர்ந்து நடைபெற நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

14 மாவட்டங்கள்

| வ. எண். | இலவச பயிற்சி மையங்கள் நடைபெறும் மாவட்டங்கள் பெயர் | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விழுப்புரம் | 3,50,000/– |
| 2. | நாமக்கல் | 3,50,000/ |
| 3. | திருவண்ணாமலை | 3,50,000/ |
| 4. | தருமபுரி | 3,50,000/ |
| 5. | வேலூர் | 3,50,000/ |
| 6. | சேலம் | 3,50,000/ |
| 7. | திருச்சிராப்பள்ளி | 3,50,000/ |
| 8. | ஈரோடு | 3,50,000/ |
| 9. | கோயம்புத்தூர் | 3,50,000/ |
| 10. | நீலகிரி | 3,50,000/ |
| 11. | கன்னியாகுமரி | 3,50,000/ |
| 12. | காஞ்சிபுரம் | 3,50,000/ |
| 13. | திண்டுக்கல் | 3,50,000/ |
| 14. | விருதுநகர் | 3,50,000/ |
| மொத்தம் | | 49,00,000/– |

<u>திட்டம்– 8</u>

<u>சிறுதானிய உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு பழங்குடியின விவசாயிகளின் பங்குகளை வழங்குதல்</u>

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையின் பழங்குடியின சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட உற்பத்தியாளர் நிறுவனம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாதுமலை வட்டத்தில் இருக்கும் ஜமுனாமரத்தூரில் உள்ளது. இந்த நிறுவனமானது 28 அக்டோபர் 2015 அன்று மத்திய அரசின் SFAC (சிறு விவசாயிகளின் வேளாண் வணிக கூட்டமைப்பு ) திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு தானம் அறக்கட்டளையின் வணிக பிரிவான களஞ்சியம் தொழிலகம் ஆதார நிறுவனமாக ஊக்கமளித்து வருகிறது. சிறு தானியங்களின் முக்கிய பயிரான சாமை உற்பத்தியை அதிகப்படுத்தவே இந்த நிறுவனம்

ஆரம்பிக்கப்பட்டது. ஜவ்வாது மலையின் அதிகம் பயிரிடப்படும் பயிரும் சாமையே ஆகும். எனவே, ஜவ்வாதுமலையின் விவசாயிகள் மலையாளி என்கிற பழங்குடியின வகுப்பை சார்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் கல்வியறிவு பெறாதவர்கள், இவர்களுக்கு மிகவும் குறைந்தளவு நிலப்பரப்பே விவசாயம் செய்வதற்கு உள்ளது (0.5 ஏக்கர் முதல் 3.00 ஏக்கர் வரை) இதில் பயிர் செய்வது அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்று மாதங்கள் மட்டும், அதனால் இந்த நிறுவனத்தின் உறுப்பினர்களாகிய விவசாயிகள் தங்களது வருமானத்திற்காக வேறு மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து விவசாய தோட்டத்திற்கு கூலி வேலை செய்ய வேண்டிய அவல நிலை நிலவி வருகிறது. இவர்கள் வறுமையின் காரணமாக அவர்களால் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு பங்குத் தொகையாக ரூ.1000 செலுத்துவது கடினமாக உள்ளது. இதில், 1006 விவசாயிகளை உறுப்பினராக கொண்ட இந்நிறுவனத்தில் 106 பேர் ரூ.1000-ம் 10 பேர் ரூ.500-ம் மீதம் உள்ள 890 பேர் ரூ.200/- பங்கு தொகையாக செலுத்தியுள்ளார்கள். இந்த நிறுவனத்தில் பங்கு முதலீட்டு தொகையாக ரூ.2,89,000/- மட்டுமே உள்ளது. இந்த நிதியினைக் கொண்டு விவசாயிகளிடமிருந்து சாமை கொள்முதல் செய்து வணிகம் செய்ய இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வறுமை காரணமாக ரூ.200/- செலுத்திய பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.800/-ம் ரூ.500/- செலுத்தியவர்களுக்கு ரூ.500/- வழங்கப்பட வேண்டும் . மேற்காணும் நிதியினை அவர்களது உற்பத்தி பொருட்களான சாமை அரிசி, திணை அரிசி மற்றும் மலைத்தேன் போன்றவற்றை நல்ல தர அடையாளத்தோடு மேம்படுத்தி விற்பனை செய்யவும், சிறுதானியத்தை பற்றின விழிப்புணர்வை நகரப்புறங்களில் ஏற்படுத்துவதினால், அதனை உட்கொள்ளும் நுகர்வோரின் உடல்நலமும், அதனை பயிர் செய்யும் விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேம்படும். எனவே, பழங்குடியின விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு ஜவ்வாதுமலை சிறு தானிய உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு 10 விவசாயிகளுக்கு தலா

ரூ.500/—வீதம் ரூ.5000/— மற்றும் 890 விவசாயிகளுக்கு தலா ரூ. 800/— வீதம் ரூ.7,12,000/— ஆக மொத்த கூடுதல் தொகை ரூ.7,17,000/—(ரூபாய் ஏழு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்)யினை 2020—2021 ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கலாம்.

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.